செ.வெ.எண்: 58 நாள்: 30.07.2021

நாகப்பட்டினம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2020-21 ஆண்டு குறுவை நெல் சாகுபடி செய்திட 4500 ஏக்கர் இலக்கு பெறப்பட்டு இது நாள்வரை 32,715 ஏக்கர் சாதனை அடையப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2021-22-ம் ஆண்டிற்கு நெல் மற்றும் பயறுவகை பயிர்கள் 97000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளவும் இதன் மூலம் 3.004 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ஜுன் 2021 மாதம் வரை 13,086 ஹெக்டேர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இரசாயன உரங்கள் யூரியா 3,048 மெ.டன், டி.ஏ.பி 2,325 மெ.டன், பொட்டாஷ்- 1,929 மெ.டன், காம்ப்ளக்ஸ் 1,078 மெ.டன் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் மற்றும் தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பூச்சி மற்றும் நோய் திரவ மருந்துகள் 4123 லிட்டர் தனியார் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டு குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து ஜுன் 12-ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்காக ரூ.61.09 கோடி மதிப்பில் குறுவை தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 50 சத மானியத்தில் நெல் விதைகளும், 100 சத மானியத்தில் உரங்கள் மற்றும் பசுந்தாள் உர விதைகளும், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கிடவும், பண்ணைக் குட்டை அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விதைகளை பொறுத்தமட்டில் குறுவை சாகுபடிக்காக இதுவரை 130 மெ.டன் நெல் விதைகள் 50 சத மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

உரங்களைப் பொறுத்தமட்டில் ஏக்கருக்கு இரண்டு மூட்டை யூரியா (90 கிலோ), ஒரு மூட்டை டிஏபி (50 கிலோ), அரை மூட்டை பொட்டாஷ் (25 கிலோ) ஆகியவை 100 சத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக இரண்டு ஏக்கருக்கு மட்டுமே பயனடைய இயலும்.

**இதுவரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11,304 விவசாயிகள் 10,692 ஏக்கர் பரப்பிற்கு இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். அதில் 7,716 விவசாயிகளுக்கு 7,298 ஏக்கர் பரப்பிற்கு உரங்கள் 100 சத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.**

பசுந்தாள் உர விதைகளை விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது தனியார் விதை விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். தனியார் விதை விற்பனை நிலையத்தில் பசுந்தாள் விதை வாங்கிய விவசாயிகள் அதற்கான பட்டியலை வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒப்படைத்தால் அதற்குரிய தொகை அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, வைக்கோல் கட்டும் கருவி, நெல் அறுவடை இயந்திரம், ஆகியவை மானியத்தில்

வழங்கப்படும். மேலும், பண்ணைக்குட்டை அமைத்திடவும் மானியம் வழங்கப்படும். அதற்கான விண்ணப்பத்தினை வேளாண் பொறியியல் துறையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம மந்திரியின் கௌரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து தகுதியான விவசாயிகளுக்கு இடுபொருள் மற்றும் பிற தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆண்டிற்கு ரூ.6000/- நிதி உதவி அளித்துவருகிறது. பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதி திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை (Kisan Credit Card) வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்ய தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

2021-22 ஆம் நிதி ஆண்டில் தென்னை பயிர்களில் சொட்டுநீர் பாசனமும், இதர பயிர்களில் தெளிப்பு நீர் பாசனமும் மேற்கொள்ள 600 ஹெக்டேர் பொருள் இலக்கு பெறப்பட்டு ரூ.**3.83** கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதுவரை 77.01 ஹெக்டேர் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி அலுவலர்கள் அல்லது வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி தேவைப்படும் ஆவணங்களை வழங்கி தங்களது பெயரை முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்செயலி மூலம் வேளாண்மைத்துறை மானியத் திட்டங்கள், பயனாளிகள் முன்பதிவு, பயிர் காப்பீடு விபரம், உரம் மற்றும் விதை இருப்பு விபரம், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் விபரம், விளை பொருட்கள் சந்தை விலை நிலவரம், வானிலை முன்னறிவிப்பு பற்றிய செய்திகள், தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்கள் வருகை விபரம் ஆகிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொண்டு பயன்பெற முடியும். இதுவரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் **17,613** விவசாயிகள் இச்செயலியை பதிவிறக்கம் செய்துள்ளார்கள். அனைத்து விவசாயிகளும் உழவன் கைபேசி செயலியினை உடன் கூகுள் பதிவிறக்க செயலி மூலமாக தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைங்களுக்கு நேரில் தங்களது கைபேசியினைக் கொண்டு சென்று பதிவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2019-20 ஆண்டு குறுவை மற்றும் சம்பா பயிர்களுக்கான காப்பீட்டு இழப்பீடு தொகை பயனாளிகளின் வங்கி கணக்கு தவறாக உள்ளதால் சரி செய்யப்பட்டு இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2020-21 ஆண்டிற்கான குறுவை காப்பீட்டு இழப்பீடு தொகை காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டு இன்னும் ஒரு வார காலத்திற்குள் விவசாயிகளுக்கு வந்தடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.